<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மதுராந்தகம்</u>

முன்னிலை : செல்வி. பா.பவ்யா, B.A, L.L.B.,

நீதித்துறை நடுவர் எண்.2, மதுராந்தகம்

2026 ஆம் ஆண்டு ஜீன் 30–ம் நாள் செவ்வாய்கிழமை

2057 திருவள்ளுவராண்டு, பராபவ வருடம் ஆனி திங்கள் 16–ம் நாள்

<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்: 452/2025</u>

அரசுக்காக,
உதவி காவல் ஆய்வாளர்,
மேல்வருவத்தூர் காவல் நிலையம்,
காவல் நிலைய குற்ற எண்.54/2025 ........ குற்றமுறையிடுபவர்

– எதிர் –

A1–கதிர்வேல், த/பெ.கன்னியப்பன்,
எண்.15/25, ராணி அண்ணா நகர்,
கே.கே.நகர்
சென்னை மாவட்டம்.

A2–ஞானசேகர், த/பெமாரியப்பன்,
எண்.84/23, 3வது தெரு,
விஜயராயபுரம், சாலிகிராமம்
சென்னை மாவட்டம்–93.

A3–காண்டீபன், த/பெ.கன்னியப்பன்,
எண்.100, சற்குரு தெரு,
கொளம்பாக்கம் கிராமம்,
காட்டுதேவாத்தூர் அஞ்சல்
செங்கல்பட்டு மாவட்டம்.

A4–லோகநாதன், த/பெ.கைலாசம்,
அம்பேத்கர் தெரு,
கொளம்பாக்கம் கிராமம், மதுராந்தகம் தாலுக்கா
செங்கல்பட்டு மாவட்டம்.

A5–யோகநந்தம், த/பெ.கைலாசம்,
அம்பேத்கர் தெரு,
கொளம்பாக்கம் கிராமம், மதுராந்தகம் தாலுக்கா
செங்கல்பட்டு மாவட்டம்.

........ எதிரிகள்

| | | |
|---|---|---|
| 1. | Name of the Court | Judicial Magistrate No. II, Madurantakam. |
| 2. | Name of the Judge | Selvi. B.Bavya, , B.A., L.L.B., |
| 3. | Date of Judgment | 30.06.2026 |
| 4. | Case Number along with CNR Number | CC. 452/2025<br>TNCG15-001692-2025 |
| 5. | Name of the Parties of the case | State Govt,<br>Sub Inspector of Police, Melmaruvathur Police Station.<br>**Complainant** |
| | | A1–கதிர்வேல், த/பெ.கன்னியப்பன்,<br>A2–ஞானசேகர், த/பெமாரியப்பன்,<br>A3–காண்டீபன், த/பெ.கன்னியப்பன்,<br>A4–லோகநாதன், த/பெ.கைலாசம்,<br>A5–யோகநந்தம், த/பெ.கைலாசம்,<br>**Accused** |
| 6. | Date of Occurrence | 09.02.2025 |
| 7. | Date of Complaint | 10.02.2025 |
| 8. | Date of Arrest if any and remand | A1 to A4 Anticipatory Bail, A5 appeared U/s. 35(3)(4) BNSS |
| 9. | Period of Remand of the Accused | ----- |
| 10. | Date of release on bail | ----- |
| 11. | Date of Final Report | 10.03.2025 |
| 12. | Date of Committal of the case to the Court of Sessions | ------- |
| 13. | Date of Questioning of the accused U/s. 316 Bharatiya Nagarik Suraksha Sanhita | 09.01.2026 |
| 14. | Date of Examination in Chief and Cross Examination of the Witnesses | (see table below) |
| 15. | Date of filing of all miscellaneous petitions and their results including the results on Challenge before the Superior Courts except routine petitions like petition U/s. 355 BNSS | ------ |
| 16. | Date of Examination of the Accused U/s.351 of BNSS Act | 25.06.2026 |

| Witness | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 16.06.2026 | 16.06.2026 |
| PW2 | 23.06.2026 | 23.06.2026 |

| | | |
|---|---|---|
| 17. | Details of abscondence of an accused and his appearance / production as the case may be | Nil |
| 18. | Grant of Stay by Superior Courts and the results there of | ------ |
| 19. | Date of Commencement of Trial | 09.01.2026 |
| 20. | Date of Closure of Trial | 25.06.2026 |
| 21. | Date of Sentence of Order | 30.06.2026 |
| 22. | Date of Service of Copy of Judgment to the Accused | ------ |
| 23. | If any delay, give Explanation | ------ |

****

இவ்வழக்கானது 14.11.2025ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் ஆண்டுபட்டிகை வழக்கு எண் 452/2025 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக 30.06.2026–ம் தேதியன்று என்முன்பாக விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.M.மணி, மற்றும் திரு.S.அருண் அம்பேத்கர் அவர்கள் முன்னிலையாகியும் ஏற்று நடத்திய இவ்வழக்கில் வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

<u>தீர்ப்புரை</u>

**1.** இவ்வழக்கானது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 296(b), 115(2), 118(2) 351(3 )–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டதை கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

**<u>2. குற்றமுறையீட்டின் சுருக்கம்:</u>**

இவ்வழக்கில் கடந்த 09.02.2025ம் தேதி மதியம் சுமார் 12.30 மணியளவில் கொல்லம்பாக்கம் கிராமத்தில், சரிதா என்பவர் சாட்சி–1 அன்பரசு என்பவரிடம் வாத்துக்கறி எடுத்துக் கொண்டு தனது வீட்டிற்கு வா என அலைபேசி மூலம் கூறியதன் பேரில் சாட்சி–1 அன்பரசு மாலை சுமார் 3.00 மணியளவில் சரிதா என்பவரது வீட்டிற்கு சென்றுள்ளார் என்றும், ஆனால் அங்கு குழந்தை லிஜித்தா என்பவர் மட்டும் இருந்துள்ளார் என்றும், சாட்சி–1 அன்பரசு சரிதா வீட்டின் பிரிட்ஜில் வாத்து கறியை வைத்து விட்டு வெளியே வரும் போது எதிரிகள் அனைவரும் சாட்சி–1ஐ தகாத வார்த்தைகளால் பேசி, தகராறு செய்து 1ம் எதிரி, சாட்சி–1ஐ கத்தியால் வெட்டியும், 2ம்

எதிரி சாட்சி–1ஐ பிடித்துக் கொள்ள 3 முதல் 5 வரையிலான எதிரிகள், சாட்சி–1ஐ பைப்பாலும், கல்லாலும் அடித்து சாட்சி–1க்கு கொடுங்காயம் ஏற்படுத்தியதாகவும், சாட்சி–1ஐ பார்த்து "இனிமேல் என் பேச்சுக்கு வந்தால் உன்னை காலி செய்து விடுவேன்" என கொலை மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே, எதிரிகள் மீது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 296(b), 115(2), 118(2) 351(3)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்றமுறையிடுபவர் தரப்பில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3**. குற்ற இறுதி அறிக்கையை பெற்று வழக்கினை 14.11.2025ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டு எதிரிகள் ஆஜரானதன் பேரில் பிரிவு 230 BNSS–ன் கீழ் குற்றப்பத்திரிகை மற்றும் வழக்கின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரிகள் குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், எதிரிகள் மீது வனையப்பட்ட பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 296(b), 118(2), 118(2) r/w 49, 351(3)–ன் கீழான குற்றச்சாட்டுகளை குறித்து எதிரிகளுக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டது. அதற்கு எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார்கள். எனவே அரசு தரப்பில் சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4.** இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகளோ அல்லது சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை. இவ்வழக்கில் சுமார் 3 அடி நீளமுள்ள கட்டை சான்று பொருளாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு.

**<u>அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து  தெரியவரும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

**5.** அரசு தரப்பில், அ.சா.1 அன்பரசன் என்பவர் தனது சாட்சியத்தில் தான் தற்போது கொல்லம்பாக்கத்தில் வசித்து டிரைவராக வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி காண்டீபன் என்பவரை தனக்கு தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும், 09.02.2025ம் தேதி மதியம் சுமார் 3.00 மணியளவில் இருசக்கர வாகனத்தில் சோத்துப்பாக்கத்தில் இருந்து ராமாபுரம் சென்று கொண்டிருந்தபோது கீழே விழுந்து தலையில் அடிப்பட்டது என்றும், பின்னர் தான் மேல்மருவத்தூர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன் என்றும், வழக்கு குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்று பிறழ்  சாட்சியம் அளித்துள்ளார்.

**6.** மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் 2025ல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த பார்த்திபன் என்பவரின் கையொப்பம் மற்றும் விசாரணை பற்றி நன்கு தெரியும் என்றும், தற்போது அவர் பணியிட மாறுதலாகி சென்றுவிட்டதால் வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்று, மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வரும் அ.சா.2 ஆசைதம்பி என்பவர் தனது சாட்சியத்தில்  கடந்த 10.02.2025ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் பார்த்திபன் நிலைய பொறுப்பில் இருந்தபோது மேல்மருவத்தூர்  மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் பேரில் அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அன்பரசு என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலத்தை பெற்று வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.54/2025 BNS பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜெகன் மற்றும் வீரமகேந்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், பின்னர் 10.02.2025 ம் தேதி மதியம் 12.45 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கங்கா சரவணன் நகர் அருகே சுமார் 3 அடி நீளமுள்ள கட்டையை

கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் 10.03.2025 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு நிலையம் ஆஜரான எதிரி யோகநந்தம் என்பவருக்கு பிரிவு 35(3)(4) BNSS ன் கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார். பின்னர் மற்ற எதிரிகளை தேடிவந்த நிலையில் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றதால் கைது செய்யவில்லை. பின்னர் வழக்கு சொத்தினை படிவம் 91 உடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், அந்த 3 அடி நீளமுள்ள கட்டை என்றும், பின்னர் வழக்கில் காயம் பட்டவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் உலகநாதன் என்பவரை விசாரித்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் வழக்கில் காயம்பட்ட நபருக்கு மருத்துவர் கொடுங்காயம் என்று சான்று வழங்கியதால் வழக்கின் சட்டப்பிரிவான 296(b), 115(2), 118(1), 351(3)–ல் இருந்து 296(b), 115(2), 118(2), 351(3) ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார் என்றும், இத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது 296(b), 115(2), 118(2), 351(3)–ன் பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**7.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் 351(1)(ஆ)BNSS–ன் கீழ் வினவிய போது எதிரிகள் அதனை மறுத்து கூறினார். எதிரிகள் தரப்பில் சாட்சிகளோ சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**8.** இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய அம்சம் என்னவென்றால் அரசு தரப்பில் எதிரிகள் மீது வனையப்பட்ட பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 296(b), 118(2), 118(2) r/w 49, 351(3)–ன் கீழான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு :-</u>**

**9.** பாரதிய சாட்சிய அதினியம் பிரிவு 104 ன் படி எதிரிகளுக்கு எதிரான இவ்வழக்கினை நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பை சேர்ந்ததாகும். இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்க அ.சா.1 முதல் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கபட்டு அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யபட்டுள்ளன. தற்போது தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் எதிரிகள் மீது வனையப்பட்ட பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 296(b), 118(2), 118(2) r/w 49, 351(3)-ன் கீழான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிகளின் சாட்சியங்களின் மூலம் எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பினால் நிரூபிக்கப்பட்டுள்ளதா இல்லையா? என்பதே ஆகும்.

**10.** அ.சா.1 அன்பரசன் என்பவர் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். அவர் கொடுத்ததாக சொல்லப்படும் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1ஐ பரிசீலிக்கையில் 09.02.2025ம் தேதி மதியம் 12:30 மணிக்கு சரிதா என்பவர் வாத்து கறி எடுத்துக் கொண்டு தனது வீட்டுக்கு வா என அ சா 1 யை அலைபேசி மூலம் கூறியதன் பேரில் தான் மாலை சுமார் 3 மணி அளவில் சரிதா வீட்டிற்கு வந்தேன் என்றும், ஆனால் குழந்தை லிஜித்தா என்பவர் மட்டும் வீட்டில் இருந்ததால் தான் வாத்து கறி சரிதா வீட்டிலிருந்த குளிர்சாதனப்பெட்டியில் வைத்து விட்டு வெளியே வரும்போது 1.கதிர்வேல், 2.ஞானசேகர், 3.காண்டீபன், 4.லோகநாதன், 5.யோகநந்தம் ஆகியோர் தன்னை தகாத வார்த்தையால் பேசி கதிர்வேல் என்பவர் கத்தியால் வெட்டினார் என்றும், ஞானசேகர் என்பவர் பிடித்துக் கொண்டார் என்றும், லோகநாதன், காண்டீபன், யோகானந்தம் ஆகியோர் பைபாலும், கல்லாலும், தலையில், மார்பு, கன்னத்தில், வலது இடது கை முட்டியில் அடித்தார்கள் என்றும், மேற்படி நபர்கள் மீது விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

**11.** ஆனால், அ.சா.1ன் சாட்சியத்தினை பரிசீலிக்கையில் ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி காண்டீபன் என்பவரை தனக்கு தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார்

வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும், இவ்வழக்கின் ஆணிவேரான புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1ஐ மறுத்து சாட்சியம் அளித்துள்ளதால், மேற்படி, அ.சா.ஆ.1ல் உள்ள சங்கதிகளின் உண்மைத்தன்மைக் குறித்த சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு எழுகிறது.

**12.** இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள விபத்து பதிவேடு அ.சா.ஆ.7ஐ பரிசீலிக்கையில் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மருத்துவமனையில், சிகிச்சைக்கு வந்த அன்பரசன் என்பவர் கடந்த 09.02.2025ம் தேதி மாலை 3.30 மணிக்கு பொறியியல் கல்லூரி அருகே தாக்கப்பட்டதாக சொன்னதாக குறிப்பு உள்ளது. ஆனால், யார் அவரை எவ்வாறு தாக்கினர்கள் என்றும் சம்பவயிடத்தினை தெளிவாக குறிப்பீட்டும் எந்த குறிப்பும் காணபடவில்லை. மேலும், மேற்படி நபர் மதுபோதையில் இருந்ததாக குறிப்பு உள்ளது. காயச்சான்று அ.சா.ஆ.8ஐ காண்கையில் மேற்படி அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை கொடுங்காயம் என சான்று வழங்கப்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது. அ.சா.1 அவரது நீதிமன்ற சாட்சியத்தில் கடந்த 09.02.2025ம் தேதி மதியம் சுமார் 3.00 மணியளவில் இருசக்கர வாகனத்தில் சோத்துப்பாக்கத்தில் இருந்து ராமாபுரம் சென்று கொண்டிருந்தபோது கீழே விழுந்து தலையில் அடிப்பட்டது என்றும், பின்னர் தான் மேல்மருவத்தூர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அரசு தரப்பில் எதிரிகள் தாக்கப் பயன்படுத்தியதாக சொல்லபடும் பழுப்பு, கல் மற்றும் கத்தி எதுவும் கைப்பற்றப்படவில்லை. எனவே, மேற்படி முரண்பாடுகளை வைத்து பார்க்கும் பொழுது மேற்படி அ.சா.1க்கு ஏற்பட்ட கொடுங்காயம் அவர் மதுபோதையில் வாகனத்தில் இருந்து கீழே விழுந்ததால் ஏற்பட்டதா என்ற நியாயமான சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு எழுகிறது. மேற்படி அ.சா.1 அரசு தரப்பில் இருந்து பிறழ்ந்து பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால் மற்ற பட்டியல் சாட்சிகள் விசாரிக்கப்படாமல் விட்டொழிக்கப்பட்டனர்.

**13.** மேலும், அரசு தரப்பில் முன்னிருத்தபட்ட அ.சா.1 எதிரிகளுடன் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் பேசி முடித்து கொண்டதாக கூறி பிரிவு 359(3)

BNSS–ன் கீழ் மனுதாக்கல் செய்த மனு C.M.P.NO.657/2026–ல் கோப்பிற்கு எடுக்கபட்டதில் இவ்வழக்கின் குற்றப்பிரிவுகள் சமரசம் செய்து கொள்ளமுடியாத குற்றங்கள் என்பதால் அம்மனு தள்ளுபடி செய்யபட்டுள்ளது.

**14.** இவ்வழக்கில் எதிரியுடன் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் பேசி முடித்து கொண்டதாக தாக்கல் செய்த மனுவை வைத்து பார்க்கும் போது, மாண்புமிகு உச்சநீதிமன்றம் Central Bureau of Investigations Vs Sadhu Ram Singh Reported in 2017(1) MLJ Crl724 SC என்ற வழக்கில் Continuance of Criminal Proceedings after compromise has been arrived between complainant and accused, would amount to abuse of process of court and futility – Trial would be prolonged and it may end in which may be of no consequence to any parties என்று கூறியுள்ளதை கவனத்தில் எடுத்துக் கொள்வது அவசியமாகிறது. இந்த முன் தீர்ப்பின் அடிப்படையில் இருதரப்பினரும் சமாதானமாக சென்ற நிலையில் இவ்வழக்கினை தொடர்வது அனாவசியமானது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**15.** மேலும், இவ்வழக்கில் புகார்தாரர் அ.சா.1 அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ள நிலையில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி திரு.பார்த்திபன் என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, புலன்விசாரணை செய்து, இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.2 ஆசைதம்பி என்பவரின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**16.** மேற்கண்ட முரண்பாடுகளால், அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் அரசு தரப்பு சான்றாவணங்களையும் ஒப்பிட்டு பரிசீலித்து பார்க்கும் போது, புகாரில் கண்டுள்ள சங்கதிகளை ஒத்து வலியுறுத்தி எதிரிகள் அ.சா.1ஐ பொது இடத்தில் வைத்து மற்றவர்கள் முன்னிலையில் அருவருக்கத்தக்க வகையில் ஆபாசமான வார்த்தைகளை மொழிந்ததாகவோ, 1ம் எதிரி கத்தியால் வெட்டி 2ம் எதிரி அ.சா.1ஐ பிடித்துக் கொள்ள 3

முதல் 5 வரையிலான எதிரிகள் அ.சா.1 பைப்பாலும், கல்லாலும் தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்ததாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை என்பது தெரிய வருகிறது. எனவே, எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 296(b), 118(2), 118(2) r/w 49, 351(3)–ன் கீழான கூறுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**17.** எனவே முடிவாக, மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையிலும், இந்த வழக்கின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் அரசு தரப்பில் எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு நிரூபணமாகததால் எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 296(b), 118(2), 118(2) r/w 49, 351(3)–ன் படியும் தண்டிக்கப்படத்தக்க குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை பிரிவு 271(1) BNSS–ன் கீழ் அக்குற்றசாட்டுகளிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**18.** இவ்வழக்கில் சுமார் 3 அடி நீளமுள்ள கட்டை சா.பொ.1ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு சொத்து மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

**19.** இந்த வழக்கு விசாரணை நிலுவையில் இருந்த போது எதிரிகள் பிணையில் சென்றிருந்தால், மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் எழுதிக் கொடுத்த பிணைப்பத்திரம் ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு ஜீன் திங்கள் 30–ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

BAVYA BALU

Judicial Magistrate No. II
Digitally signed by BAVYA BALU
Location: Madurantakam
Date: 2026.06.30 19:19:40 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மதுராந்தகம்.**

<u>அரசு தரப்புச் சாட்சிகள்:</u>

| | |
|---|---|
| அ.சா.1 | அன்பரசன், த/பெ.மாரிமுத்து |
| அ.சா.2 | ஆசைதம்பி, த/பெ.சன்னாசி |

<u>அரசு தரப்புச் சான்றாவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் | அ.சா.2ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.2ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.3 | பார்வை மகசர் | அ.சா.2ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் | அ.சா.2ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.5 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.2ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.6 | படிவம் 91 | அ.சா.2ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.7 | விபத்து பதிவேடு | அ.சா.2ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.8 | காயச்சான்று | அ.சா.2ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.9 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.2ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |

<u>அரசு தரப்புச் சான்றுப்பொருள் :</u> சுமார் 3 அடி நீளமுள்ள கட்டை–1.

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:</u> இல்லை.

<u>குறிப்பு:</u>

1. சாட்சிகள் யாரும் விசாரணைக் காலத்தில் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

2. விசாரணைக் காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தனர்.

3. காவல் துறையினருக்கு நடவடிக்கைச்சீட்டு வழங்கப்பட்டது.

BAVYA BALU

Judicial Magistrate No. II
Digitally signed by BAVYA BALU
Location: Madurantakam
Date: 2026.06.30 19:19:48 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
மதுராந்தகம்.